# தனிப்பட்ட மற்றும் குடும்ப பிரச்சினைகளுக்கு ஆவிக்குரிய ஆலோசனை

## நாத்தான் செய்ததுபோல பிரச்சினைகள் உள்ள மக்களுக்கு உதவுங்கள்

தற்போதைய தேவைகளுக்கும் வட்டாரப் பழக்கவழக்கங்களுக்கும் பொருத்தமான செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும்.

**ஜெபம் :** “அன்பான தேவனே, உண்மையை அன்போடு பேச எனக்கு உதவி செய்யும்” (எபே. 4:15).

**1. இந்த வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி ஆவிக்குரிய ஆலோசனைகளை வழங்க ஆயத்தப்படவும்**

திருத்தப்பட வேண்டிய ஒருவருக்கு, வேதனை தரும் உண்மையை எடுத்துக் கூறுவதே அவர்களுக்கு நீங்கள் செய்யும் அன்பு நிறைந்த விஷயமாகும். தேவனோடு கூடிய ஐக்கியத்தை சீர்ப்படுத்த நாத்தான் எவ்வாறு தாவீதுக்கு உதவினான் என்பதைக் காணலாம் (2 சாமு அதி. 11-12).

1) பிரச்சினை தனிப்பட்டதாக இருந்தால் தனிப்பட்ட முறையில் அதைக் குறித்துப் பேசவும். இல்லாவிட்டால் ஒரு குழுவாக ஆலோசிக்கலாம். இதனால் மற்றவர்களும் புத்திமதி கூறி, தேவ உதவிக்காக ஜெபிக்கலாம்.

**ஒரு மனிதன் கேட்கிறார்: எனக்கு ஒரு கெட்ட பழக்கம் உண்டு. அதை விட்டுவிட எனக்கு உதவுவீர்களா**

**ஒரு மேய்ப்பன் பதிலளிக்கிறார்: இயேசு உங்களுக்கு உதவுவார். என் வீட்டுக்கு வாருங்கள். நாம் தனியாகப் பேசுவோம்**

இந்தப் பிரச்சினை ஒரு விசுவாசிக்கு எதிரான குற்றம் என்றால், பாதிக்கப்பட்டவர் என்ன செய்ய வேண்டும் என்பதை மத். 18:15-16 ல் காண்க.

2) எதிர் பாலாருக்கு (Opposite sex) ஆலோசனை கூறும்போது, மற்றவர்கள் இருக்கும் இடத்தில் வைத்தே கூற வேண்டும். தனியாகவோ, அடைக்கப்பட்டுள்ள அறைக்குள்ளோ சந்திப்பது ஒருபோதும் கூடாது. தீமையின் தோற்றத்தை கூட நாம் தவிர்க்க வேண்டும் (1 தெச. 5:22).

நான் மிகவும் அதைரியம் அடைந்துள்ளேன். தயவுசெய்து எனக்கு உதவுங்கள்

என் மனைவி தோட்டத்தில் இருக்கிறாள். வாருங்கள் அங்கே போவோம்

3) பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவர்களிடம் மாத்திரம் பேசவும். பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர், குடும்பம், அல்லது விசுவாசிகளோடு மட்டும் பேச வேண்டும். எஸ்தர் ஆமானின் மேல் எடுத்த எடுப்பில் குற்றம் சாட்டவில்லை. ஆமானால் ஏமாற்றப்பட்ட மன்னனும் ஆமானும் ஒன்றாக இருக்கும்போதே அவனது தீயதிட்டத்தை வெளிப்படுத்திக் காட்டினாள் (எஸ்தர் 5-7).

நானும் எனது கணவரும் அதிகமாக வாக்குவாதம் செய்கிறோம். அவர் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார்

அப்படியானால் நாளை அவரோடு ஒன்றாக அமர்ந்து பேசுவோம்

4) மக்கள் ஒரு பிரச்சினையைப் பற்றிக் கூறும்போது கவனித்துக் கேட்க வேண்டும். அடிப்படையான காரணத்தை அறியும் வரையில் கேள்விகள் கேட்க வேண்டும். ஒரு பிரச்சினையைப் பற்றி சரியாக அறிந்துகொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை யாக்கோபு 1:5 ல் காண்க.

பிள்ளைகளை கவனிப்பதில் என் கணவர் எனக்கு உதவி செய்வதில்லை என்பதே பிரச்சினை

ஆமாம்! ஆனால் பிரச்சினை அதுவல்ல. நீ அவர்களை மற்ற குழந்தைகளைப் போல் விளையாட விடாமல் அதிகமாக திட்டுகிறாய்.

பிறருடைய இரகசியங்களை உங்களுக்குள்ளாகவே வைத்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட முறையில் நீங்கள் கேள்விப்பட்டதை பிறருக்கு கூறக் கூடாது. புறங்கூறுதலைப் பற்றி நீதி. 11:13 ல் என்ன கூறி இருக்கிறது என்பதைப் பார்க்கவும்.

நீங்கள் என் ஒன்றுவிட்ட சகோதரனுக்கு ஆலோசனை கூறிய போது அவன் என்ன கூறினான்?

இரகசியமாக மக்கள் நம்மிடம் கூறியதை நாம் பிறருக்கு கூறக் கூடாது.

5) ஒரு பிரச்சினையின் அடிப்படை காரணத்தை தேவ வார்த்தையைக் கொண்டு அலசிப் பார்க்க வேண்டும். முதல் முதலில் நீங்கள் கேட்கும் குற்றச்சாட்டுக்களை வைத்துக்கொண்டு ஒரு பிரச்சினையை அணுகக்கூடாது. அவைகள் உண்மையான காரணத்திற்கான அறிகுறிகளே தவிர வேறல்ல. மோசமான விஷயங்களை தேவ வார்த்தையைக் கொண்டு திருத்துங்கள்; "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாய் இருப்பதாக ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லுங்கள்" (கொலோ. 3:16). அவிசுவாசிகள் யாருடைய பொய்யைத் தழுவிக் கொள்வார்கள் என்பதை 1 தீமோ. 4:1 ல் காண்க.

ì என்னுடைய மோசமான பழக்க வழக்கத்தை என்னால் நிறுத்த முடியாது. அது மிகவும் பலமாக உள்ளது. ì

அந்தப் பொய்யை சாத்தான் உன்னிடம் கூறினான். இயேசுவின் வல்லமையின் மேலுள்ள உனது விசுவாசத்தை அவன் பலவீனமாக்க நீ விட்டுவிட்டாய். நீ நன்றாக வளர்ந்தவன். எவ்வாறு நடந்து கொள்வது என்பது உனக்குத் தெரியும்.

- ஒருவன் இன்னும் விசுவாசியாது இருந்தால், மனம் திரும்பி கிறிஸ்துவுக்குள் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள அவனுக்கு உதவுங்கள்.
- ஒருவன் விசுவாசித்தும், தகுதியற்றவனாக தனக்குத் தானே எண்ணினால், எபேசியர் 1ஆம் அதிகாரத்தை சேர்ந்து படித்து, அவன் தேவனுடைய பார்வையில் யார் என்பதையும், இயேசு கிறிஸ்துவுக்குள் நித்தியமாக அவன் பெற்றுக் கொண்டது என்ன என்பதையும் எடுத்துக் காட்டுங்கள். அதற்காக நன்றி கூற அவனுக்கு உதவுங்கள்.

- ஒருவன் பாதுகாப்பு இல்லாதவனாகவும், தேவன் தன்னை நேசிக்கவில்லை என்றும் எண்ணினால் ரோமர் 8 ஐ சேர்ந்து வாசிக்கவும்.
- ஒருவன் தன்னைவிட்டு தேவன் நீங்கி இருக்கிறார் என்றோ, இயேசு தன் மேல் கோபம் உள்ளவராக இருக்கிறார் என்றோ எண்ணினால், கொலோசெயர் 1-3 அதிகாரங்களில், இயேசு எவ்வாறு அவனுக்கு வல்லமையையும், காணப்படாதவைகளையும் தேவனிடத்தில் இருந்து கொண்டு வந்தார் என்பதை எடுத்துக் காட்டவும்.

6) பிரச்சினையைத் தீர்க்க சரியாக என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் அறுதியிட்டு உணரவும், பரிசுத்த ஆவியானவரின் உதவியால் தங்கள் நடத்தையை மாற்றிக்கொள்ள ஒத்துக்கொள்ளவும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

**நான் என் மனைவியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவளை நான் மன்னிக்க வேண்டும். தேவன் கூறுகிறபடி அவளை நான் நேசிக்க வேண்டும்.**

**ஆம்! இதுவே சரியான வழி! தேவன் உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வரை நான் தொடர்ந்து வருவேன்.**

7) தங்களை மாற்றிக்கொள்ள விரும்புகிற மக்களுக்கு மட்டுமே ஆலோசனை வழங்குங்கள். தங்கள் நடத்தையை மாற்றிக்கொள்ள விரும்பாதவர்களையும், மாற விரும்பாமல் சும்மா உங்களிடம் பேசுவதை மட்டுமே விரும்புகிறவர்களையும் சந்திப்பதை தவிர்த்து விடுங்கள். கவனத்தைத் தங்கள் பக்கம் கவர விரும்புகிறவர்களிடம் நேரத்தை வீணடிக்க வேண்டாம். பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதையே சிலர் விரும்புவர். சிலர் தங்களைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டு இருப்பார்கள். இயேசு கூறினார், "பன்றிகள் முன் முத்துக்களைப் போட வேண்டாம்." (மத். 7:6).

**2. உடன் ஊழியர்களுடன் இந்த வாரத்தில் செய்யக் கூடிய செயல்பாடுகளைப் பற்றித் திட்டமிடுங்கள்**

மேற்கூறிய வழிமுறைகளின் படி அனுபவம் வாய்ந்த விசுவாசிகளை ஆவிக்குரிய ஆலோசகர்களாக ஆயத்தப்படுத்துங்கள்.

ஆலோசனை தேவைப்படுவோரை சந்தித்துப் பேசுங்கள்

எதிர்வரும் ஆராதனை நேரத்துக்காக உடன் ஊழியர்களுடன் சேர்ந்து ஆயத்தப்படவும். நாத்தான் தாவீதுக்கு ஆலோசனை சொன்னான் என்பதைப் பற்றிக் கூறுங்கள், 2 சாமு. அதி. 11-12.

மேற்கூறிய வழிகாட்டும் ஆலோசனைகளுக்கு அடிப்படையான வேதாகம பகுதிகளை விவரித்துக் கூறுங்கள்.

ஆவிக்குரிய ஆலோசனையின் மூலமாக அண்மையில் அடைந்த வெற்றிக்காக தேவனை துதியுங்கள் அல்லது ஓர் அறிக்கையைக் கொடுங்கள்.

குழந்தைகள் தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை அல்லது கேள்விகளை அவை முன் அளிக்கட்டும்

1 கொரி. 14:3 ஐ யாவருமாக மனப்பாடம் செய்க.

கர்த்தரின் பந்தியை பரிமாறும் முன் 1 கொரி 11:28-32 ல் உள்ள எச்சரிக்கையை சுருக்கமாக விவரிக்கலாம்.

ஜெபிக்கவும், திட்டமிடவும், ஆவிக்குரிய ஆலோசனையை அளிக்கவும் பெற்றுக் கொள்ளவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

Copyright © 2003 by Paul-Timothy. Download Paul-Timothy studies freely from www.Paul-Timothy.net